### இந்து சமய அறநிலையத் துறை சார்பில்

# சேலம் மாவட்டத்தில் 18 இணைகளுக்கு திருமணம்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் நடத்தி வைத்து வாழ்த்துரை!

சேலம், அக். 23-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்துத்தரப்பு மக்களின் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கும் வகையில் பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் சேலம், நங்கவள்ளியில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் திருமண விழாவினை நடத்தி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத்துறை திருக்கோவில்கள் சார்பில் சென்னையில் நடைபெற்ற திருமண விழாவில் 31 இணைகளுக்கான திருமண விழாவினை நடத்தி வைத்ததைத்தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நேற்று முன்தினம் (21.10.2024) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோவிலில் திருமண விழாவினை நடத்தி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவில் உள்ள பிற மாநிலங்கள் வியந்து பார்க்கும் வகையில் சிறப்பான ஆட்சியை வழங்கி வருகிறார்கள். குறிப்பாக, அனைத்துத்தரப்பு மக்களின் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்தவகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றது முதல் இந்து சமய அறநிலையத்துறையின் வாயிலாக இதுவரை இல்லாத வகையில் அதிக அளவிலான திருக்கோவில்கள் சீரமைக்கப்பட்டு குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 2024-2025-ஆம் ஆண்டின் சட்டப்பேரவை அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை, திருவான்மியூர், அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில் இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்கள் சார்பில் நடைபெறும் திருமண விழாவில் சென்னை மாவட்டத் திருக்கோயில்கள் சார்பில் 31 இணைகளுக்கான திருமண விழாவினைத் தலைமையேற்று இன்றையதினம் நடத்தி வைத்துள்ளார்கள்.

இதனைத்தொடர்ந்து, இன்றையதினம் சேலம் மாவட்டத்தில் 18 இணைகளுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளன. இதில் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நங்கவள்ளி அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோவிலில் 10 இணைகளுக்கும், வாழப்பாடி வட்டம், பேளூர், அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் திருக்கோவிலில் 8 இணைகளுக்கும் என 2 பகுதிகளுக்கும் சேர்த்து 18 இணைகளுக்கு திருமணம் நடத்தி வைக்கப்பட்டுள்ளன. இத்திருமண விழாவில் மணவாழ்வினைத் தொடங்கும் தம்பதியினருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், புதுமண தம்பதியினருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் 4 கிராம் தங்கத்தில் திருமாங்கல்யம், கைக்கடிகாரம், பூஜை பொருட்கள், கட்டில், பீரோ, மெத்தை, மிக்ஸி மற்றும் பாத்திரங்கள் உள்ளிட்ட 13 பொருட்கள் சுமார் ரூ.60,000/- மதிப்பிலான சீர்வரிசைகளுடன் திருமண விழா நடத்தி வைக்கப்பட்டுள்ளன. புதுமண தம்பதிகள் அனைத்து வளங்களையும் பெற்று வாழ்வில் சிறந்து விளங்க மீண்டும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் அவர்கள் பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திருமதி சபர்மதி, உதவி ஆணையர் ராஜா, மாவட்ட அறங்காவலர் நியமனக் குழுத் தலைவர் கே.ஆர். முருகன், செயல் அலுவலர் திருமதி சுதா மற்றும் அர்த்தநாரி உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

---

### கழக மருத்துவ அணி

## மாநில நிர்வாகிகளுக்கு பொறுப்பு மாவட்டங்கள்!

### மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

05/10/2024 அன்று நடைபெற்ற கழக ஒருங்கிணைப்புக் குழு ஆய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் அடிப்படையில், கழக மருத்துவ அணியின் மண்டல பொறுப்பாளர்கள் பின்வருமாறு மாற்றி அமைக்கப்படுகிறார்கள்.

| பெயர், பொறுப்பு &தொலைபேசி எண் | பொறுப்பு மாவட்டங்கள் |
|---|---|
| **மரு.கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி. மருத்துவ அணித் தலைவர்.** | சென்னை தெற்கு, சென்னைதென் மேற்கு, சென்னை மேற்கு, சென்னை கிழக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை வடக்கு, காஞ்சிபுரம் வடக்கு |
| **மரு.எம்.செந்தில்நாதன், துணைத் தலைவர்.** | ஈரோடு தெற்கு, ஈரோடு வடக்கு , கரூர் |
| **மரு.எ.வ.வே.கம்பன், துணைத் தலைவர்.** | திருவண்ணாமலை தெற்கு, திருவண்ணாமலை வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு கள்ளக்குறிச்சி வடக்கு, திருப்பத்தூர் |
| **மரு.எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. மருத்துவ அணிச் செயலாளர்.** | கன்னியாகுமரி மேற்கு, கன்னியாகுமரி கிழக்கு, திருநெல்வேலி மத்திய மாவட்டம், திருநெல்வேலி கிழக்கு, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு |
| **மரு.இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. இணைச் செயலாளர்** | கடலூர் மேற்கு, கடலூர் கிழக்கு, விழுப்புரம் தெற்கு, விழுப்புரம் வடக்கு |
| **மரு.ஆர்.கோகுல் கிருபாசங்கர், இணைச் செயலாளர்.** | நீலகிரி, கோவை மாநகர், கோவை தெற்கு கோவை வடக்கு, திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, திண்டுக்கல் மேற்கு, திண்டுக்கல் கிழக்கு |
| **மரு.ஆர்.இராஜேஸ்வரி மோகன்காந்தி, துணைச் செயலாளர்.** | வேலூர் மத்திய மாவட்டம், வேலூர் கிழக்கு (இராணிப்பேட்டை), கிருஷ்ணகிரி மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு |
| **மருஅஞ்சுகம் பூபதி, துணைச் செயலாளர்.** | தஞ்சை தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய மாவட்டம், திருவாரூர், நாகை மயிலாடுதுறை |
| **மரு.ஜெ.அருண், துணைச் செயலாளர்.** | திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய மாவட்டம் |
| **மரு.ஆர்.டி.அரசு, துணைச் செயலாளர்.** | காஞ்சிபுரம் தெற்கு |
| **மரு.ஆர் அண்ணாமலை துணைச் செயலாளர்** | புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, திருச்சி மத்திய, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, சிவகங்கை |
| **திரு எஸ்.ஏ.இரமேஷ், துணைச் செயலாளர்.** | அரியலூர், பெரம்பலூர் |
| **மரு.கலை கதிரவன், துணைச் செயலாளர்.** | சேலம் கிழக்கு, சேலம் மத்திய மாவட்டம், சேலம் மேற்கு, தருமபுரி மேற்கு, தருமபுரி கிழக்கு |
| **திருமதி ஆர்.திலகவதி ஜெயராஜ், துணைச் செயலாளர்.** | மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மாநகர், |
| **திரு இராஜேஷ் பாபு, துணைச் செயலாளர்.** | நாமக்கல் மேற்கு, நாமக்கல்கிழக்கு, |
| **திரு மன்சூர் அலி கான், துணைச் செயலாளர்.** | தேனி வடக்கு, தேனி தெற்கு, |
| **திரு செண்பக விநாயகம், துணைச் செயலாளர்.** | தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, |
| **மரு.ஆர்.கே.திலீப் குமார் துணைச் செயலாளர்.** | இராமநாதபுரம், தூத்துகுடி வடக்கு, தூத்துகுடி தெற்கு |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 21.10.2024

**மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ.**
செயலாளர்
தி.மு.க. மருத்துவ அணி

---

### தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

## கடலூர் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

### தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர் தொண்டர் அணியின் கடலூர் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கடலூர் கிழக்கு மாவட்டம்**
**கடலூர் மாநகரம்**

**தலைவர் -** **பி.ஹெர்பர்ட்ஷீலா** 74, புதியசுனாமி நகர், சோனாங்குப்பம், கடலூர்ஒடி,

**துணைத் தலைவர் -** **ர.ரேணுகா** 58, அருந்ததி நகர், மஞ்சக்குப்பம், கடலூர் ஒடி,

**அமைப்பாளர் -** **க.பாரதி** 54, படவட்டம்மன்கோவில் தெரு, புதுப்பாளையம், கடலூர்1,

**துணை அமைப்பாளர்கள் -** 1)ம.சத்தியா. 19, முத்தையா நகர், திருப்பாப்புலியூர், கடலூர் ஒடி, 2) வி.மஞ்சு. 61, கிளைவ் தெரு, கடலூர் ஒடி, 3) ச.தனலட்சுமி. 8/2, மாரியம்மன்கோயில் தெரு, ஆனைக்குப்பம், கடலூர்1, 4)ஜெ.செல்வி. 144/55, சரங்கு தெரு, கடலூர் ஒடி, 5) கு.லதா . 23, ராமசாமி தெரு, புதுப்பாளையம், கடலூர்1,

**சமூக வலைதள அமைப்பாளர்கள் -** 1) க.பாக்கியவதி. 21, பொன்னன் தெரு, புதுப்பாளையம், கடலூர்1, 2) அ. ஹேமாவதி. 1/1 குண்டுசாலை, செம்மண்டலம், கடலூர்1,

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 21.10.2024

**நாமக்கல் ப.இராணி**
செயலாளர்
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

---

### தி.மு.க. மகளிர் அணி

## கடலூர் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

### தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர் அணியின் கடலூர் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கடலூர் கிழக்கு மாவட்டம்**
**கடலூர் மாநகரம்**

**தலைவர் - ஐ. பார்வதி**, ராஜாம்பாள் நகர், மஞ்சக்குப்பம், கடலூர்1,

**துணைத் தலைவர் - இ.செந்தில்குமாரி**, 45, இளம்வழுதி நகர், வன்னியர்பாளையம், கடலூர்1.

**அமைப்பாளர் -ரா.சுபாஷினி**, 10, பிள்ளையார்கோயில், தெரு, சொரக்கால்பட்டு, கடலூர்1.

**துணை அமைப்பாளர்கள் -** 1) த.சங்கீதா, 3/2, அங்காளம்மன் கோயில் தெரு, மஞ்சக்குப்பம், கடலூர்1, 2) ர. கவிதா, 70/16, மோகன் தெரு, கடலூர் ஒடி. 3) அ.சுதா, 7,மணாலி எஸ்டேட், புதுப்பாளையம், கடலூர்1. 4) சசிகலா ஜெயசீலன், 100, நவநீதா நகர், இரண்டாவது தெரு, திருப்பாப்புலியூர், கடலூர்2. 5) செ.விஜயலட்சுமி, 56எ, சுண்ணாம்புகாரத் தெரு, கடலூர்ஒடி.

**சமூக வலைதள அமைப்பாளர்கள் -** 1) பி. மேரிஜெனிபர், 74, புதிய சுனாமி நகர், சோனாங்குப்பம், கடலூர்1. 2) சொ.அன்புக்கரசி, 9/3, ஜெயின் தெரு, கடலூர்1.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 21.10.2024

**ஜெ.ஹெலன் டேவிட்சன்**
செயலாளர்
தி.மு.க. மகளிர் அணி

---

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமை!

## வட சென்னை திராவிடர் கழகம் கி.இராமலிங்கம் இல்ல மண விழா வரவேற்பு!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - முன்னணியினர் வாழ்த்து!

சென்னை, அக். 23-

வடசென்னை மாவட்ட திராவிடர் கழக காப்பாளர் கி. இராமலிங்கம் - இரா. இலட்சுமி ஆகியோரின் புதல்வி இரா.கவிதா போரூர் கலாவதி ரங்கநாதனின் புதல்வர் இரா.ஹேமந்த்குமார் ஆகியோரது மண விழா வரவேற்பு நிகழ்ச்சி திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தலைமையில், இந்து சமய அறநிலையத் துறை (மற்றும்) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் பி.கே. சேகர்பாபு, சென்னை பெருநகர மேயர் பிரியா முன்னிலையில், இன்று (23.10.2024, புதன்கிழமை) மாலை 5 மணிக்கு பெரியார் நகர், கார்த்திகேயன் சாலையில் உள்ள திருவள்ளுவர் கூட்டுறவு திருமண மாளிகையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் திராவிடர் கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத் தலைவர் ப.ரங்கநாதன், தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் இரா. கிரிராஜன், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர்கள் துரை.சந்திரசேகரன், வீ. அன்புராஜ், பொருளாளர் வீ.குமரேசன், பிரச்சார செயலாளர் அ.அருள்மொழி, மாநில திராவிடர் கழக ஒருங்கிணைப்பாளர்கள் தஞ்சை இரா.ஜெயக்குமார், உரத்தநாடு இரா.குணசேகரன், திராவிடர் கழக வழக்குரைஞரணித் தலைவர் த.வீரசேகரன், திராவிடர் கழக செயலவைத் தலைவர் ஆ.வீரமர்த்தினி, திராவிடர் கழக வெளியுறவுச் செயலாளர்கோ.கருணாநிதி,

தமிழ்நாடு ஆதி திராவிடர் பழங்குடியின் ஆணைய உறுப்பினர் வழக்குரைஞர் சு.குமார தேவன், கொளத்தூர் கிழக்கு, மேற்கு மாவட்ட செயலாளர்கள் அய். சி. எப்.வ. முரளிதரன், எ.நாகராசன், 67ஆவது வட்ட சென்னை பெருநகர உறுப்பினர் எம்.தாவூத்பீ, வடசென்னை மாவட்டக் கழக தலைவர் தளபதி பாண்டியன், செயலாளர் புரசை சு.அன்புச்செல்வன், திராவிடர் கழக வழக்கறிஞர் இரா.இரத்தினகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

பேராசிரியர் வி.டெய்சி மணியம்மை இணைப்புரை வழங்குகிறார். நிறைவாக தி.செ. கணேசன் நன்றி கூறுகிறார்.

---

### ரெட்டியார்பட்டியில் உள்ள

## ஆவின் மத்திய பால்பண்ணையில் திடீர் ஆய்வு!

### அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் மேற்கொண்டார்!

நெல்லை, அக். 23–

நெல்லை பாளையங்கோட்டை ரெட்டியார்பட்டியில் உள்ள ஆவின் மத்திய பால்பண்ணையை பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் திடீர் ஆய்வுப் பணி மேற்கொண்டார்.

பாளை ரெட்டியார்பட்டியில் உள்ள ஆவின் மத்திய பால் பண்ணையை பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் ஆய்வின் போது, பால் உற்பத்தியை பெருக்குவது தொடர்பாக அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தினார்.

இதில் நெல்லை, தென்காசி ஆகிய மாவட்டங்களுக்கான ஆவினில் தற்போது பால் உற்பத்தி 42,000ம் லிட்டர் உள்ளது. இதனை 54,000ம் லிட்டராக விரைவில் அதிகரிக்க வேண்டும்.

மேலும் ஆவின் பால் விற்பனை தினமும் 32,000ம் உள்ளது. இதனையும் 35,000ம் ஆக அதிகரிக்க வேண்டும் என அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

நிகழ்வில் ஆவின் மத்திய பால் உற்பத்தி பொது மேலாளர் சிவராமகிருஷ்ணன், பண்ணை மேலாளர் ஜான்சுனில், மேலாளர் கார்த்திகேயன், நிர்வாக மேலாளர் (பொ) ரமேஷ், மேலாளர் (தரம்) கௌசல்யா மேலாளர் (விற்பனை பிரிவு)அனுஷா சிங்,பொது மேலாளர் நேர்முக உதவியாளர் சிவனு பாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

---



இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் சார்பில் கோவை உக்கடம் லட்சுமி நரசிம்ம பெருமாள் கோவிலில் 20 இணைகளுக்கு திருமணம் நடைபெற்றது ரூ. 60 ஆயிரம் மதிப்புள்ள சீர் வரிசை பொருட்கள் வழங்கப்பட்டது இத்திருமண விழாவில் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொ.அ.ரவி, கணபதி ராஜ்குமார் எம்.பி., மேயர் ரங்கநாயகி, கிழக்கு மண்டல தலைவர் இளஞ்செல்வி கார்த்திக் கோவை மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் மெட்டல் ராஜாமணி, அறங்காவலர் குழு தலைவர்கள் ஜெயக்குமார்,ரகுபதி சு.நாகலெட்சுமி,பரமசிவம், அறங்காவலர் குழு உறுப்பினர்கள் ஸ்ரீவத்சன், வெங்கடேஷ் அழகிரிசாமி, மனோன்மணி,ரவிச்சந்திரன்,கிருஷ்ணகுமார் பகுதிக்கழக செயலாளர்கள் மார்க்கெட் மனோகரன், கார்த்திக் செல்வராஜ் பொதுக்குழு உறுப்பினர் சசிக்குமார், வட்டக்கழக செயலாளர் டவுன்.ப.ஆனந்தன் இந்து சமய அறநிலைய துறை அதிகாரிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

---

### புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்

## ஆலங்குடி தொகுதி பார்வையாளர் அறிமுக கூட்டம்!



### மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

தமிழக முதலமைச்சர் - தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் படி தமிழ்நாட்டிலுள்ள 234 தொகுதிகளிலும் பூத் கமிட்டி அமைத்தல், வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்காளர் பெயர் சேர்த்தல் / நீக்கல் உள்ளிட்ட தேர்தல் பணிகளை மேற்பார்வையிட தொகுதி பார்வையாளர்களை தலைமைக்கழகம் அறிவித்துள்ளது. அதன்படி புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஆலங்குடி தொகுதிக்கான தொகுதி பார்வையாளர் அறிமுக கூட்டம் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன்; முன்னிலையில் இன்று (23.10.2024 - புதன்கிழமை) மாலை 05.00 மணியளவில் கீழ்க்கண்ட விவரப்படி நடைபெறும். மேற்படி ஆலங்குடி தொகுதி பார்வையாளர் அறிமுக கூட்டத்தில் ஆலங்குடி தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், நகராட்சி தலைவர்கள், துணைத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சி குழு தலைவர், மாவட்ட கவுன்சிலர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

| தொகுதி | தொகுதி பார்வையாளர் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| ஆலங்குடி | எழில் மாறன் செல்வேந்திரன், மாநில துணைச் செயலாளர், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை | மாலை 05.00 மணி | ஆர்.கே.மஹால், ஆலங்குடி |

**அமைச்சர் எஸ்.ரகுபதி**
செயலாளர்-புதுக்கோட்டை தெற்கு
மாவட்ட தி.மு.க.

---

### தி.மு.க. பவள விழா ஆண்டை முன்னிட்டு

## தி.மு.க. மருத்துவ அணிச் சார்பில் சமூகநீதி மற்றும் பகுத்தறிவுப் பாசறைக் கூட்டங்கள்!

### மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

05/10/2024 அன்று நடைபெற்ற கழக ஒருங்கிணைப்புக் குழு ஆய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் அடிப்படையில், கழக பவள விழா ஆண்டை முன்னிட்டு கழக மருத்துவ அணிச் சார்பில் மண்டல அளவில் 'சமூகநீதி மற்றும் பகுத்தறிவு பாசறைக் கூட்டங்கள்' மற்றும் மருத்துவ அணி நிர்வாகிகளுக்கான ஆய்வுக் கூட்டங்கள் நடைபெறவுள்ளது.

| மாதம் | இடம் | பங்கேற்கும் மாவட்டங்கள் |
|---|---|---|
| டிசம்பர், 2024 | தஞ்சாவூர் | தஞ்சை தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய மாவட்டம், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை. |
| ஜனவரி, 2025 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை தெற்கு, திருவண்ணாமலை வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கடலூர் மேற்கு, கடலூர் கிழக்கு, திருப்பத்தூர் |
| பிப்ரவரி, 2025 | கிருஷ்ணகிரி | வேலூர், இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு |
| மார்ச், 2025 | சேலம் | சேலம் மேற்கு, சேலம் கிழக்கு, சேலம் மத்திய மாவட்டம், தருமபுரி மேற்கு, தருமபுரி கிழக்கு, கரூர், நாமக்கல் மேற்கு, நாமக்கல் கிழக்கு. |
| ஏப்ரல், 2025 | தேனி | மதுரை மாநகர், மதுரை வடக்கு, மதுரை தெற்கு, தேனி தெற்கு, தேனி வடக்கு, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு. |
| மே, 2025 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை தெற்கு, புதுக்கோட்டை வடக்கு, சிவகங்கை, இராமநாதபுரம் |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 21.10.2024

**மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ.,**
செயலாளர்
தி.மு.க.மருத்துவ அணி